பதிப்பு:  மார்ச் 2006
மறுபதிப்பு: ஜணவரி 2008
ISBN :  978-981-05-9761-0

© சமூக  வளர்ச்சி , இளையர், விளையாட்டுத் துறை  அமைச்சு
http://www.mcys.gov.sg

முழு உரிமைப் பதிவு பெற்றது. இப் பதிப்பின் எந்தவொரு பகுதியையும் சமூக  வளர்ச்சி, இளையர், விளையாட்டுத் துறை அமைச்சின் அனுமதி பெறாமல் மறு பதிப்பிடுவதோ, சாதனங்களில் பதிவு செய்வதோஅல்லது எப்பகுதியையும் மின்னியல், இயந்திர மூலம் நகல் எடுப்பதோ அல்லது ஒலிப்பதிவு செய்வதோ கூடாது.

# பொருளடக்கம்

முன்னுரை 2

சமூக வளர்ச்சி, இளையர், விளையாட்டுத் துறை அமைச்சின் பங்கு 3

குழந்தைப் பராமரிப்பு நிலையங்களின் பங்கு 4

பெற்றோர்களின் பங்கு 5

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் 7
நிர்வாக விவகாரங்கள்
பழக்க வழக்க நிர்வாகம்
நிதி விவகாரங்கள்
நிகழ்ச்சி மற்றும் பாடத் திட்டம்
பாதுகாப்பு, ஆரோக்கியம், சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்து
ஊழியர்-ஆசிரியர் விவகாரங்கள்
பராமரிப்பு மானியம் விவகாரங்கள்

இணைப்பு- பயனுள்ள தொடர்புகளுக்கு 34

அன்புடைய பெற்றோர் / காப்பாளருக்கு,

குழந்தைப் பராமரிப்பு நிலையத்தில் குழந்தைகள் தங்கியிருக்கும் ஆண்டுகளில் அவர்களின் மேம்பாட்டுக்கு பயனுள்ள பங்காற்றக் கூடியது என்பதால், பெற்றோர்களுக்கும் குழந்தைப் பராமரிப்பு நிலையங்களுக்கும் இடையிலான பங்காளித்துவம் மிக முக்கியமானது. குழந்தைப் பராமரிப்பு அம்சங்கள் பற்றிய சரியான விவரம் பெற்றோர்களுக்கு எட்டினால் மட்டுமே இந்தப் பங்காளித்துவப் பண்பு பெரிதும் பலனளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அதைக் கருத்தில் கொண்டே பெற்றோர்-நிலைய பங்காளிதத்துவத்தை வளர்ப்பதில் உங்களுக்கு உதவும் வகையில், குடும்ப சேவைப் பிரிவு இந்த வழிகாட்டிக் கையேட்டை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறது. குழந்தைப் பராமரிப்பு நிலையத்தில் சேர்க்கப்பட்ட உங்கள் குழந்தையின் அக்கறைக்குரிய பொது விவகாரங்கள் குறித்த தகவலை இது வழங்குகிறது.

இந்த வழிகாட்டிக் கையேடு, பாதுகாப்பு, ஆரோக்கியம், சுகாதாரம், நோய்கள், வைப்புத் தொகையைத் திருப்பித் தருவது மற்றும் பராமரிப்பு மானியம் போன்ற நிர்வாகப் பணிகள் உள்ளிட்ட குழந்தைப் பராமரிப்பு நிலையத்தின் பல்வேறு நடைமுறைகளை எடுத்துரைக்கும் பயனுள்ள ஒரு சாதனமாக அமைந்துள்ளது. மேலும், குழந்தைப் பராமரிப்பு தொடர்பான முக்கிய விவகாரங்களில் ஆலோசனை அல்லது உதவியை நாடுவதற்கு நீங்கள் அணுகக் கூடிய சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் குறித்த தகவலையும் இது வழங்குகிறது.

நமது பங்கை நாம் புரிந்து கொள்வது, நமது பிள்ளைகளின் சிறந்த பராமரிப்பையும் கல்வியையும் வழங்குவதற்கு உதவும். நாம் ஒருங்கிணைந்து நம் பிள்ளைகளின் நலனுக்குத் தொடர்ந்து பாடுபட இந்த வழிகாட்டி உங்களுக்கு உதவும் என்று நம்புகிறோம்.

**Lee Kim Hua**
இயக்குநர்
குடும்ப சேவைப் பிரிவு
சமூக வளர்ச்சி, இளையர், விளையாட்டுத் துறை அமைச்சு

சிங்கப்பூரிலுள்ள குழந்தைப் பராமரிப்பு நிலையங்களுக்கு குழந்தைப் பராமரிப்பு ச் சட்டம் (Cap 37A) மற்றும் விதிமுறைகளின் கீழ் அமைச்சு உரிமம் வழங்குகிறது. குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் அனைத்தும் அவை இயங்குவதற்குமுன், உரிமம் பெற வேண்டும். உரிமம் எத்தனை ஆண்டுகளுக்கு உரியது என்பதை அது தெரிவிக்கும். நிலையத்தில் உரிமத்தைப் பார்வைக்கு வைக்க வேண்டும்
குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் கீழ்க்கண்ட துறைகளில் உரிய பராமரிப்புத் தரங்களைப் பெற்றுள்ளனவா என்பதை உறுதிப்படுத்த, அமைச்சு முன்னறிவிப்பு இல்லாமல் வழக்கமான சோதனைகளை நடத்தி வருகிறது. அவை:

- சுற்றுச்சூழல் கட்டமைப்பு
- பாதுகாப்பு, ஆரோக்கியம், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து
- ஊழியர் பயிற்சி, தகுதிகள் மற்றும் தேவைகள்
- நிகழ்ச்சிகள் மற்றும் பாடத் திட்டம்
- நிர்வாகம்

நிலையங்களின் பராமரிப்புத் தரத்தையும் தகுதியையும் மதிப்பிடுவதற்கு உரிமச் சோதனைப் பட்டியல் ஒன்று பயன்படுத்தப்படுகிறது. அந்த சோதனைப் பட்டியலின் ஒரு பிரதி எல்லா குழந்தைப் பராமரிப்பு நிலையங்களுக்கும் வழங்கப்படுகிறது. பராமரிப்புத் தரங்களை நிலையங்கள் தொடர்ந்து மேம்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, சுய மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும் என்பதே அதன் நோக்கம். "சிறந்த நடவடிக்கை கையேடு" எனும் பிரதி ஒன்றையும் நிலையங்களுக்கு நாங்கள் வழங்குகிறோம். குழந்தைப் பராமரிப்பு அம்சங்கள் அனைத்திலும் செயல்படுத்தக் கூடிய பாராட்டத்தக்க நடைமுறைகளை அது எடுத்துரைக்கிறது.

குழந்தைப் பராமரிப்பு நிலையங்களில் குழந்தைகள்மீது முறைகேடான எவ்வித நடைமுறையும் பின்பற்றப்படுவதற்கு அமைச்சு தடை விதித்துள்ளது. குழந்தைப் பராமரிப்புச் சட்டம் மற்றும் விதிமுறைகளுக்கு முரணாகச் செயல்படும் குழந்தைப் பராமரிப்பு நிலையங்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

உங்கள் பிள்ளை வளரும் பருவத்தில் அதிக நேரத்தை நிலையத்தில் கழிப்பதால் அவர்களின் மேம்பாட்டில் குழந்தைப் பராமரிப்பு நிலையத்திற்கு முக்கிய பங்கு உண்டு.  நிலையத்தில் தங்கியிருக்கும் காலத்தில் உங்கள் பிள்ளையின் உடல், அறிவு, உணர்ச்சி, சமுகம், கலை உணர்வு மற்றும் புத்தாக்கத் திறன்கள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெறுகின்றன. எனவே,  குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் பெற்றோர்களுடன் வெளிப்படையான தகவல் தொடர்பு வழிமுறைகளுடன் முறையான மற்றும்  முறை சாராத தொடர்புகளையும்  மேம்படுத்திக் கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றன.

மேலும், தங்களின் சட்ட விதிமுறைகள் வெளிப்படையானவை, பெற்றோர்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டவை என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பும் அவற்றுக்கு உண்டு. முறையான பயிற்சியும் தொழில் முறைத் தேர்ச்சித் தகுதியும் பெற்ற ஊழியர்களை நிலையங்கள் பெற்றிருப்பது அவசியம். மொத்தத்தில், சிறந்த பராமரிப்பு மற்றும் கல்வித் தரங்கள் கிடைப்பதை  நிலையங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.







பெற்றோர்கள் என்ற முறையில் உங்களுக்கும் முக்கிய பங்கு உண்டு. உங்கள் பிள்ளையின் சிறந்த நலனைக் கருதி, குழந்தைப் பராமரிப்பு நிலைய ஊழியர்களுடன் ஆக்ககரமான உறவை மேம்படுத்திக் கொள்வது எப்போதும் அவசியம். குழந்தைப் பராமரிப்பு நிலையத்தின் பல்வேறு நடவடிக்கைகளுக்கும் ஆதரவாக நீங்கள் நேரத்தையும் நிபுணத்துவத்தையும் ஒதுக்க வேண்டும். கதை சொல்லல், நிகழ்ச்சிகளில் பங்கேற்றல், கைவினைத் தொழில், களப் பயணங்களில் பங்கேற்றல், விழாக் கொண்டாட்டங்கள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், பயிலரங்குகள் ஆகியவை அவற்றில் அடங்கும்.

இந்த வழிகாட்டி, குழந்தைப் பராமரிப்பு நிலையத்தில் உங்கள் பிள்ளை சேர்க்கப்படும் போது உங்களுக்கு வழங்கப்படும் நிலையக் கையேட்டுக்கு ஒரு துணையாக அமைகிறது. நீங்கள் குழந்தைப் பராமரிப்பு நிலையங்களின் சட்ட விதிமுறைகள் மற்றும் பராமரிப்புக் கொள்கைகள் குறித்த கையேட்டை நன்கு படித்தறிந்து பரிச்சயமாக்கிக் கொள்வது மிகவும் அவசியம். குழந்தைப் பராமரிப்பு நிலையங்களிலிருந்து நீங்கள் எதிர்பார்க்கக் கூடியவற்றை புரிந்து, அறிந்து கொள்ள அது உதவும்.



குழந்தைப் பராமரிப்பு நிலைய மேற்பார்வையாளர்களும் ஆசிரியர்களும் உங்கள் பிள்ளைகளின் பிரதான பராமரிப்பாளர்களாக இருப்பதால், உங்கள் பிள்ளை தொடர்பான விஷயங்களில் கவலைகள் இருக்குமானால் அவர்களுடன் நீங்கள் விவாதிக்கலாம் அல்லது விளக்கம் பெறலாம்.

முடிவாக, வழக்கமான மற்றும் வெளிப்படையான தொடர்பு, பெற்றோர்களுக்கும் உங்கள் பிள்ளையைப் பராமரிக்கும் குழந்தைப் பராமரிப்பு நிலையத்திற்கும் இடையிலான வெற்றிகரமான பங்காளித்துவத்திற்கு உதவுகிறது. பெற்றோர்கள் என்ற முறையில் உங்கள் பொறுப்புகளையும், நிலைய ஊழியர்களின் பணிகளையும் நீங்கள் அறிந்திருப்பது உங்கள் எதிர்பார்ப்புகளை நன்கு நிர்வகிக்கவும், உங்கள் பிள்ளைக்கு வலுவான, ஆரோக்கியமான, ஆதரவான சூழ்நிலையை உருவாக்கவும் உதவும்.



## நிர்வாக விவகாரங்கள்

**கே1. குழந்தைப் பராமரிப்பு நிலையம் எத்தனை மணி நேரம் இயங்குகிறது?**

பெரும்பாலான குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 7.00 மணியிலிருந்து மாலை7.00 மணி வரையும், சனிக்கிழமைகளில் காலை 7.00 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணி வரையும் திறந்திருக்கும். வேலையிடங்களிலுள்ள குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் அவை அமைந்துள்ள நிறுவனங்களின் வேலை நேர அடிப்படையில் இயங்கும். சில வேலையிடங்களிலுள்ள குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் காலை 7.30 மணியிலிருந்து திறந்திருக்கும். அவற்றில் சில, மாலை 6.30 மணிக்கும் 7.30 மணிக்கும் மூடப்படும். மற்றவை வாரத்தில் 5 நாட்களுக்கு மட்டுமே இயங்கும்.

**கே2. அரசாங்கம் அறிவித்துள்ள பொது விடுமுறை நாட்கள் அல்லாத மற்ற தினங்களில் குழந்தைப் பராமரிப்பு நிலையத்தை மூட அனுமதியுள்ளதா?**

குழந்தைப் பராமரிப்பு நிலையம் ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் பொது விடுமுறை நாட்கள் தவிர்த்த ஆண்டின் எல்லா தினங்களிலும் திறந்திருக்கும். குழந்தைப் பராமரிப்பு நிலையம், ஊழியர் பயிற்சிமற்றும் மேம்பாடு, பயிலரங்குகள், பருவ கால சுத்திகரிப்புப் பணி போன்றவற்றுக்காக ஆண்டுக்கு கூடுதலாக 5 ½ நாள் மூடப்படும். மேலும் குழந்தைப் பராமரிப்பு நிலையம், கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் சீனப் புத்தாண்டுக்கு முதல் தினங்களில் அரை நாள் மூடப்படும். எனினும், அவ்வாறு மூடப்படுவதற்கு இரு மாதங்களுக்கு முன்பே பெற்றோர்களுக்குக் குழந்தைப் பராமரிப்பு நிலையம் முன்னறிவிப்பு வழங்க வேண்டும்.

**கே3. குழந்தைப் பராமரிப்பு நிலையம் ஏற்பாடு செய்யும் களப் பயணங்களில் என் பிள்ளை கலந்து கொள்ளாவிட்டால், பிள்ளையை யார் கவனித்துக் கொள்வார்கள்?**

பிள்ளைகளின் கல்வி அனுபவங்களை விரிவுபடுத்தும் ஒரு தொடர் நடவடிக்கையாக களப் பயணங்களைக் குழந்தைப் பராமரிப்பு நிலையம் ஏற்பாடு செய்யும். அந்தப் பயணங்களில் பங்கேற்க முடியாத பிள்ளைகளைக் கவனித்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி திட்ட ஊழியர்களை குழந்தைப் பராமரிப்பு நிலையம் கேட்டுக் கொள்ளும்.

## பழக்க வழக்க நிர்வாகம்

**கே1. என் பிள்ளையை குழந்தைப் பராமரிப்பு நிலையத்திலிருந்து வீட்டுக்கு அழைத்துச் செல்ல நான் வந்த போது, பிள்ளையின் முன் கையில் காயம் ஏற்பட்டிருப்பதைக் கவனித்தேன். குழந்தைப் பராமரிப்பு நிலைய ஊழியர் எவ்வித சம்பவம் குறித்தும் என்னிடம் தெரிவிக்கவில்லை. நான் எத்தகைய நடவடிக்கை எடுக்கலாம்?**

காயம் எப்படி எற்பட்டது என்பதை அறிந்து கொள்ள நீங்கள் உங்கள் பிள்ளையின் ஆசிரியரிடம் உடனடியாகப் பேசலாம். அத்தகைய சம்பவம் மீண்டும் நிகழாமல் தடுக்கும் சில வழிகள் பற்றியும் ஆசிரியரிடம் நீங்கள் விவாதிக்கலாம்.



**கே2. என் பிள்ளையை சக வகுப்புப் பிள்ளை ஒன்று அடிக்கடி கடித்து விடுகிறது. நிலையத்தின் மேற்பார்வையாளர் அந்தப் பிள்ளையின் தாயாரிடம் எடுத்துச் சொல்லியும் கூட கடிப்பதை அது நிறுத்தவில்லை. நான் என்ன செய்யலாம்?**

உங்கள் கவலையை உங்கள் பிள்ளையின் ஆசிரியரிடம் அல்லது நிலைய மேற்பார்வையாளரிடம் கூறுங்கள். இந்த விவகாரத்திற்கு தீர்வு காணும்படி நிலையத்தின் செயல் திட்டப் பிரிவை நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். சக பிள்ளை அதன் கடிக்கும் பழக்கத்தைக் கைவிடுவதற்கு உதவும் தனிப்பட்ட ஒரு திட்டத்தையும் நிலையம் தயாரிக்கும்.

**கே3. என் பிள்ளையின் நிலையத்தில் ஆசிரியர்கள் பிள்ளைகளிடம் அடிக்கடி கூச்சலும் அதிக சத்தமும் எழுப்புவதைக் கேட்கிறேன். அத்தகைய குழந்தை நிர்வாக முறை பற்றிய கவலையை நான் யாரிடம் முறையிடலாம்?**

நிலைய மேற்பார்வையாளரிடம் அதைப் பற்றி விவாதியுங்கள். அந்த விவகாரம் அவருக்குத் தெரியுமா என்பதை தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். நிலையத்தின் குழந்தை நிர்வாக முறைகளைப் பற்றி கேளுங்கள். நிலைமை சீரடையாவிட்டால் அமைச்சை அணுகுங்கள். முறையான புலன் விசாரணையை அது மேற்கொள்ளும்.



## நிதி விவகாரங்கள்

**கே1. நிலையத்திலிருந்து என் பிள்ளையை திருப்பியழைத்துக் கொண்டதும், பிள்ளையின் வைப்புத் தொகையை குழந்தைப் பராமரிப்பு நிலையம் தர மறுத்தால் நான் என்ன செய்யலாம்?**

குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள், சொந்த நிதி நிர்வாகக் கொள்கைகளைக் கொண்ட தனிப்பட்ட வர்த்தக அமைப்புகள். குழந்தைப் பராமரிப்புக் கட்டண வசூல், வைப்புத் தொகை மற்றும் தொகை மீட்பு போன்ற நிதி விவகாரங்கள் அவற்றில் அடங்கும். குழந்தைப் பராமரிப்பு நிலையமும் பெற்றோர்களும் கையெழுத்திட்ட நிதிப் பரிவர்த்தனை மற்றும் ஒப்பந்தங்களில் அமைச்சு தலையிடாது. பெற்றோர்கள் குழந்தைப் பராமரிப்பு நிலையத்தின் கையேட்டிலுள்ள விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் படித்து, அறிந்து கொண்ட பிறகே, அவற்றுக்கு இணங்கி நடப்பதற்குக் கையெழுத்திட வேண்டும். நிதி விவகாரங்களில் தகராறுகள் இருந்தால் பெற்றோர்கள் குழந்தைப் பராமரிப்பு நிலையத்தை நேரடியாக அணுக வேண்டும். எனினும், இருதரப்பும் நிதி விவகாரத்திற்குத் தீர்வு காணத் தவறினால், எந்த ஒரு தரப்பும் சிறு கோரிக்கை நீதி மன்றத்தின் மூலம் தீர்வு பெறலாம்.



**கே2. குழந்தைப் பராமரிப்பு நிலையத்தில் இருந்தபோது என் பிள்ளைக்குக் காயம் ஏற்பட்டது. தேவையான ஒரு மாத முன்னறிவிப்பு தராமல் என் பிள்ளையை குழந்தைப் பராமரிப்பு நிலையத்திலிருந்து மீட்டுக்கொள்ள முடிவு செய்தேன். இதன் விளைவாக, குழந்தைப் பராமரிப்பு நிலையம் எனது வைப்புத் தொகையைத் திருப்பித் தர மறுத்துவிட்டது. அமைச்சு எனக்கு உதவுமா?**

நீங்கள் பணத்தைத் திரும்பப் பெறுவது குறித்த பிரச்சினைகளை குழந்தைப் பராமரிப்பு நிலையத்துடன் நேரடியாகவே தீர்த்துக் கொள்ள வேண்டும். பெற்றோர்களுக்கும் நிலையங்களுக்கும் இடையிலான நிதித் தகராறுகளில் அமைச்சு தலையிடாது.

**கே3. என் பிள்ளையின் பராமரிப்பு நிலையம், படுக்கை மெத்தை, மெத்தை உறைகள் மற்றும் சீருடைகள் முதலானவற்றுக்கு நான் பணம் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருக்கிறது. இவற்றுக்கு நான் தொகை செலுத்த வேண்டுமா?**

குழந்தைப் பராமரிப்பு நிலையம் படுக்கை மெத்தை, மெத்தை உறைகள் மற்றும் சீருடைகள் முதலானவற்றுக்குக் கட்டணம் வசூலிக்கலாம். குழந்தைப் பராமரிப்பு நிலையத்திலிருந்து உங்கள் பிள்ளை வெளியேறும் போது இவற்றை வீட்டுக்கு எடுத்துச் செல்லலாம். உங்கள் பிள்ளை நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ள காலத்திற்கு ஆண்டுக் காப்புறுதி எடுக்க வேண்டும் என்றும் குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் கேட்டுக் கொள்ளலாம்.



**கே4. குழந்தைப் பராமரிப்பு நிலையம் கேட்கும் கீழ்க்கண்ட பொருட்களுக்கு நான் பணம் செலுத்த வேண்டுமா அல்லது அவற்றை நானே வாங்கித் தரலாமா?**

- **ஷாம்பு, திரவ சோப்பு மற்றும் டிஷ்யூ தாள் போன்ற சுத்திகரிப்புப் பொருட்கள்**
- **கலர் பென்கில் / க்ரேயன் வண்ணக்குச்சிகள் போன்றவை**
- **புத்தக ஏடுகள், கதைப் புத்தகங்கள் போன்ற கல்விச் சாதனங்கள்**
- **பச்சிளம் குழந்தைகளுக்கு: துணித் துண்டுகள், பால் பவுடர்**

குழந்தைப் பராமரிப்புக் கட்டணத்தில் சுத்திகரிப்பு. எழுதும் கலன்கள், கல்வி நடவடிக்கை ஏடுகள் மற்றும் புத்தகங்களுக்கான செலவுகள் அடங்கும். மருத்துவக் காரணங்களுக்காக தனிப்பட்ட சுத்திகரிப்புப் பொருட்களை பெற்றோர்கள் வழங்கலாம். கைக் குழந்தைகள்/ தத்தி நடக்கும் இளம் பிள்ளைகளுக்கான துணிகள், பால் பவுடர் தேவை குறித்து, வழக்கமாக பதிவு நேரத்தின் போதே பெற்றோர்களும் நிலையங்களும் பேசி ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு பச்சிளம் பிள்ளையின் தேவைகளும் வெவ்வேறாக இருப்பதால், பெரும்பாலான நிலையங்களில், துணிகள் மற்றும் பால் பவுடரை பெற்றோர்களே வழங்குகின்றனர்.



**கே5. என் பிள்ளையின் பராமரிப்பு நிலையம் பள்ளிக் கட்டணத்தை மாதந்தோறும் செலுத்துவதற்கு பதிலாக, தவணைத் தொகையாகக் கட்டச் சொல்கிறது. இது ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையா?**

குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் பிள்ளைப் பராமரிப்புக் கட்டணங்களை மாத அடிப்படையில் வசூலிப்பதே வழக்கம். மற்ற கட்டண வசூலிப்பு முறைகளையும் பின்பற்ற அனுமதி உண்டு. உதாரணமாக, இரு மாதங்களுக்கு ஒரு முறை அல்லது ஒரு தவணைக் காலத்திற்கு வசூலிக்கலாம். எனினும் மாத அடிப்படையில் கட்டணம் செலுத்தும் விஷயத்தில் பெற்றோர்களே உரிய முடிவைச் செய்ய வேண்டும். கட்டணம் செலுத்தும் முறைகள் அனைத்தும் பெற்றோர்களுக்கான கையேட்டில் தெளிவாகத் தெரிவிக்கப் பட்டுள்ளன. எனவே, அவர்கள் தங்களுக்கு வசதியான ஒரு கட்டண முறையை பின்பற்றலாம்.



**கே6. நான் குறைந்த வருமானமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவன். குழந்தைப் பராமரிப்புக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு எனக்கு உதவி தேவைப் படுகிறது. நான் எப்படி விண்ணப்பிக்கலாம்?**

குழந்தைப் பராமரிப்புச் சேவை தேவைப்படும் குடும்பங்கள் கட்டணங்களுக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் இருந்தால், நிலைய அடிப்படையிலான குழந்தைப் பராமரிப்பு நிதியுதவித் திட்டத்தின் கீழ் (CFAC), குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் மூலம் கூடுதல் நிதியுதவிக்கு விண்ணப்பிக்கலாம். உங்கள் தேவைகள் குறித்து குழந்தைப் பராமரிப்பு நிலையத்துடன் நீங்கள் விவாதிக்கலாம். உங்கள் சார்பில் நிலையம் சமுக வளர்ச் மன்றத்திலிருந்து CFAC-க்கு விண்ணப்பிக்கும்.

## நிகழ்ச்கி மற்றும் பாடத்திட்டம்

**கே1. திட்டவட்டமான ஒரு பாடத் திட்டத்தை நிலையம் பெற்றிருக்கவில்லை என்பதை நான் கவனிக்கிறேன். இதனால் என் பிள்ளை தொடக்கப் பள்ளிக்குச் செல்லும் போது முறையான கல்விக்குத் தேவையான ஆயத்த நிலையில் இருக்குமா என்று கவலைப்படுகிறேன்.**

MCYS அமைச்சு, குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் அவற்றின் பராமரிப்பு நெறிமுறைக்கு ஏற்ப பாடத் திட்டத்தையும், நிகழ்ச்சிகளையும் மேம்படுத்த உதவும் விரிவான வடிவமைப்புத் திட்டத்தை வழங்குகிறது. இந்தப் பாடத் திட்டம் ஒரு பிள்ளையின் தார்மீக மேம்பாட்டுத் திறனையும், ஒவ்வொரு பிள்ளையின் ஆற்றலையும் உயர்த்தும் நோக்கமுடையது. இந்த அணுகுமுறை, பள்ளிக் கல்விக்கு முந்திய நிகழ்ச்சிகளை வழங்குவதிலும், நிலைநாட்டுவதிலும் நீக்குப் போக்கைக் கடைப்பிடிக்க அனுமதிக்கிறது.

மேலும்,  ஆரம்பக் கல்வி பயில்வோரை உருவாக்கும் சிங்கப்பூர் பாலர் கல்விப் பாடத் திட்டம் (Nurturing Early Learners: A Framework for a Kindergarten Curriculam in Singapore) ஒன்றையும் கல்வி அமைச்சு (MOE) 2003 ஜனவரியில் வெளியிட்டது. குழந்தைப் பராமரிப்பு நிலையங்களும் அதில் அடங்கும். பள்ளிக்கல்விக்கு முந்திய பாலர் கல்வியை அவை வழங்குவதற்கு வழிகாட்டக் கூடிய திட்டம் அது.

கல்வி அமைச்சில் பதிவு பெற்ற பாலர் பள்ளிகள் தொடக்கப் பள்ளிக்கு பிள்ளைகளை உருவாக்குவதைப்  போன்றே,  குழந்தைப் பராமரிப்பு நிலையங்களும் முறையான பாலர் கல்வியைப் பெறுவதற்கு அந்தத் திட்டம் வகை செய்கிறது.

**கே2. நிலையம் நடத்தும்  உரை மற்றும் நாடக விருப்பப் பாடங்களில் பங்கேற்கும்படி என் பிள்ளை கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. கூடுதல் கட்டணம் பெற்று அத்தகைய விருப்பப் பாடங்களைக் குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள்  நடத்துவதற்கு அனுமதி உண்டா?**

குழந்தைப் பராமரிப்பு நிலையம், வழக்கமான குழந்தைப் பராமரிப்புத் திட்டங்களுடன் கூடுதல் கட்டணம் வசூலித்து விருப்பப் பாடங்களையும் நடத்தலாம். எனினும், அத்தகைய திட்டங்களைத் தொடங்குமுன்  அவற்றின் தேவை, பொருத்தம், பயன் ஆகியவற்றை நிலையம் ஆராய்ந்து மதிப்பிடுவது அவசியம். விருப்பப்  பாட நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை. குழந்தைப் பராமரிப்பு நிலையம் அமைச்சின் வழிகாட்டி முறைகளுக்கு இணங்கி நடக்க வேண்டும். விருப்பப்  பாடத்தில் பிள்ளைகள் பங்கேற்பது குறித்து பெற்றோரே முடிவு செய்யலாம். விருப்பப் பாடத்திட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்காத பிள்ளைகள் வழக்கமான குழந்தைப் பராமரிப்புக் திட்டத்தை தொடரலாம்.

**கே3. கற்பதில் என் பிள்ளைக்குச் சிரமங்கள் உள்ளன. பிள்ளை பராமரிப்புத் திட்டத்திலிருந்து அவர் நன்மையடைய மாட்டார் என்ற கவலை எனக்கு உள்ளது.**

கற்றலில் சிரமங்கள் உள்ள பிள்ளைகளுக்காக சில பிள்ளை பராமரிப்பு நிலையங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட பிள்ளை பராமரிப்புத் திட்டத்தை வழங்குகின்றன. அதன் மூலம் பிள்ளைகளின் கற்றல் ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். தேசியப் பள்ளிப் படிப்பு நீரோட்டத்தில் பிள்ளை சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு உதவுவதே ஒருங்கிணைக்கப்பட்ட திட்டத்தின் குறிக்கோளாகும். இத்தகைய சேவையைப் பெற விரும்பும் பெற்றோர்கள் நிலையங்களின் கொள்கை மற்றும் திட்டங்கள் குறித்து கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். ஒருங்கிணைக்கப்பட்ட பிள்ளை பராமரிப்புத் திட்டத்தை வழங்கும் நிலையங்கள் குறித்து தெரிந்து கொள்ள http://www.disability.org.sg/admin/download_files/ICCPC.pdf எனும் இணையத்ததளத்திற்குச் சென்று பார்க்கலாம்.

## பாதுகாப்பு, ஆரோக்கியம், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து

**கே1. என் பிள்ளைக்கு நேற்றிரவு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. ஆனால் இன்று காலை அது தணிந்து விட்டது. என் பிள்ளையைக் குழந்தைப் பராமரிப்பு நிலையத்திற்கு அழைத்துச் செல்லலாமா?**

காய்ச்சல் வழக்கமாக தொற்று நோயின் ஓர் அறிகுறியாகும். காய்ச்சல் முற்றாக நீங்கும் வரை வீட்டிலேயே பிள்ளை ஓய்வாக இருப்பதே நல்லது.



**கே2. என் பிள்ளை சின்னம்மை நோயிலிருந்து குணமடைந்திருக்கிறான். மருத்துவச் சான்றிதழ் விடுப்பு முடிவடைந்ததும் அவனை நிலையத்திற்கு நான் அழைத்துச் செல்லலாமா?**

கை, கால், வாய்ப் புண் நோய் (HFMD) போன்ற தொற்று நோய் அல்லது சின்னம்மை நோய் ஏற்பட்ட பிள்ளை, பதிவு பெற்ற மருத்துவரின் சான்றிதழைப் பெற வேண்டும். சான்றிதழ் காலாவதியாகும் சமயம், பிள்ளை மீண்டும் நிலையத்திற்குச் செல்ல மருத்துவர் அனுமதி வழங்கும் போது தான் வகுப்புக்கு அழைத்துச் செல்லலாம்.

**கே3. என் பிள்ளைக்கு கடந்த சில தினங்களாக உடல் நலமில்லை. மருந்து உட்கொண்டு வருகிறான். இருமல், காய்ச்சல் அறிகுறிகளும் ஓரளவுக்கு உள்ளன. பிள்ளை குணமடைந்து விட்டதை உறுதிப்படுத்தும் கடிதத்தை பதிவு பெற்ற மருத்துவரிடமிருந்து நான் பெற்றுவந்தால் தான் வகுப்பில் அனுமதிக்க முடியும் என்று நிலையம் மறுத்து வருகிறது. நான் என்ன செய்யலாம்?**

உங்கள் பிள்ளை குணமடைந்து மருந்து உட்கொண்டு வரும் வேளையில்,  நிலையத்திற்குத் திரும்பலாம் என பதிவு பெற்ற மருத்துவர் சான்றிதழ் கடிதம் வழங்க வேண்டும். மருத்துவர் அத்தகைய சான்றிதழ் வழங்க மறுத்தால் உங்கள் பிள்ளை நிலையத்திற்கு வரத் தகுதி பெறவில்லை என்று பொருள். பிள்ளை பூரணமாகக் குணமடையவில்லை, அதனால் வீட்டிலேயே ஓய்வாக இருந்து வர வேண்டும் என்பதையும் அது குறிக்கும். உங்கள் பிள்ளையின் நோய்த் தடுப்புச் சக்தி முறை பலவீனமடைந்துள்ளதால் மீண்டும் கிருமி தொற்றாமல் தடுக்க இது நல்ல யோசனையாகும்.

**கே4. கை, கால், வாய்ப் புண் நோய் (HFMD) பரவும் காலத்தில் என் பிள்ளையின் குழந்தைப் பராமரிப்பு நிலையத்தின் சுகாதாரப் பழக்க வழக்க நடைமுறைகள் பற்றி நான் கவலைப்படுகிறேன். என் கவலைகள் குறித்து நான் யாருடன் விவாதிக்கலாம்?**

"குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் / பாலர் பள்ளிகள் / ஆரம்பக் கல்விக்கு முந்திய நிலையங்களில் தொற்று நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாடுக்கான சுகாதாரஅமைச்சின் வழிகாட்டி நெறிமுறை" யை குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் கடைப்பிடிக்க வேண்டும். உங்களின் தனிப்பட்ட கவலைகள் குறித்து நிலையத்தின் மேற்பார்வையாளருடன் விவாதிக்கலாம். எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாவிட்டால், நீங்கள் குழந்தைப் பராமரிப்பு நிலையத் தகவல் சேவையுடன், தொலைபே எண்: 1800-2585812 தொடர்பு கொள்ளலாம். குழந்தைப் பராமரிப்பு நிலையங்களின் பொறுப்பதிகாரி அந்த விவகாரத்தைப் பரிசீலித்து சம்பந்தப்பட்ட நிலையத்திற்கு ஆலோசனை வழங்குவார்.



**கே5. என் பிள்ளையின் குழந்தைப் பராமரிப்பு நிலையத்தில் HFMD நோய் பரவியுள்ளது. அந்த நோய்ப் பரவலைத் தடுக்கும் பொருட்டு நிலையத்தை எந்த அடிப்படையில் மூடலாம்?**

குழந்தை பராமரிப்பு நிலையங்கள் தங்கள் நிலையங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் HFMD நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், அதனை சமூக வளர்ச்சி இளையர், விளையாட்டுத்துறை அமைச்சு (MCYS) மற்றும் சுகாதார அமைச்சுக்கும் (MOH) தெரியப்படுத்துதல் வேண்டும். இவ்விரு அமைச்சும் இணைந்து குழந்தைப் பராமரிப்பு நிலையங்களில் HFMD-யும் மற்ற கிருமித் தொற்று நோய்களும் பரவும் சாத்தியத்தை அணுக்கமாகக் கண்காணித்து வருகிறது. HFMD பரவும் போது நிலையங்களை மூடுவதற்கு சாத்தியமான இரண்டு அடிப்படைகள் உள்ளன.

*1. அதிகாரபூர்வ மூடல்*

வைரஸ் நச்சுக் கிருமியின் தாக்கம் நீடித்து, நோயுற்றோர் எண்ணிக்கை அதிகரிக்குமானால் குழந்தைப் பராமரிப்பு நிலையத்தை மூட வேண்டிய கட்டாயம் ஏற்படும். நோய் மேலும் பரவாமல் தடுக்க பாதிக்கப்பட்ட நிலையத்தை மூடிவிடும்படி சுகாதார அமைச்சு, MCYS-அமைச்சுக்கு ஆலோசனை தெரிவிக்கும். சுகாதார அமைச்சின் ஆலோசனைத் தொடர்ந்து MCYS குடும்ப நல சேவைப் பிரிவின் இயக்குநர், குழந்தைப் பராமரிப்பு நிலையச் சட்ட விதிமுறைகளின் கீழ் பாதிக்கப்பட்ட நிலையத்தை மூடுவதற்கு ஆணையிடுவார்.





*2. தன்னிச்சையான மூடல்*

குழந்தைப் பராமரிப்பு நிலையத்தை மூட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் தன்னிச்சையாக மூடவும் அவை முடிவு செய்யலாம். எனினும், அதற்கு பெற்றோர் அனைவரின் சம்மதமும், MCYS-அமைச்சின் ஒப்புதலும் வேண்டும். நோய் பரவாதபடி முற்றாகத் தடுத்து நிறுத்த, குறைந்த பட்சம் 5 முதல் 7 நாட்களுக்கு நிலையம் மூடப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சு ஆலோசனை வழங்குகிறது. இதைக் கருத்தில் கொண்டு, சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மாற்று பராமரிப்பு ஏற்பாடுகள் செய்வதைத் தவிர்க்கலாம். பெற்றோர்கள் அத்தகைய முடிவுக்கு வருவதைத் தவிர்க்கும் பொருட்டு அவர்களுடன் இணைந்து செயல்படும்படி குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் வலுவாக ஊக்குவிக்கப்படுகின்றன. நிலையம் மூடப்பட்டிருக்கும் போது குழந்தைப் பராமரிப்புக் கட்டணங்களைத் திருப்பித் தருவது போன்ற பண விவகாரங்களில் MCYS தலையிடாது.



தன்னிச்சையாக மூடுவதற்கு முடிவு செய்யும் நிலையங்கள், அவை மூடப்பட்டிருக்கும் காலத்தில் தங்கள் வளாகங்கள், சாதனங்கள், பொருட்கள் மற்றும் பொம்மைகள் அனைத்தையும் கிருமிகளுக்கு இடமில்லாதபடி சுத்திகரிக்க வேண்டும்.

**கே6. என் பிள்ளை அடிக்கடி கொசுக்கடியுடன் வீட்டுக்குத் திரும்புகிறது. குழந்தைப் பராமரிப்பு நிலையத்திடம் என் கவலைகளைத் தெரிவித்துள்ளேன். ஆனால், அவர்கள் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. நான் என்ன செய்யலாம்?**

கொசுக்கடியைத் தடுப்பதற்கு நிலையம் எத்தகைய தடுப்பு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை நீங்கள் தொடர்ந்து கவனித்து வாருங்கள். தினமும் காலையில் அல்லது மாலையில் பூச்சி கொல்லி புகை வீசுதல், மருந்து தெளித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் உங்கள் பிள்ளைக்கு கொசுத் தடுப்பு சாதனங்களை வழங்க வேண்டும். கொசுப் பிரச்சினை நீடித்தால் தேகிய சுற்றுப்புற நிறுவனம் (NEA) அல்லது நகர மன்றத்தின் ஆலோசனை மற்றும் உதவியை குழந்தைப் பராமரிப்பு நிலையம் நாட வேண்டும்.

**கே7. குழந்தைப் பராமரிப்பு நிலையம் என் பிள்ளைக்குத் தேவையான ஊட்டச் சத்துள்ள உணவுகளை வழங்குகிறதா என்பதை நான் தெரிந்து கொள்வது எப்படி?**

காலைச் சிற்றுண்டி, மதிய உணவு, மாலை நேரத் தேனீர் ஆகியவை நிலையம் வழங்கும் உணவுகளில் அடங்கும். பெற்றோர்கள் தெரிந்து கொள்வதற்காக நிலையம் பரிமாறும் ஒரு வார உணவுப் பட்டியல் பெற்றோர்களுக்கான அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டிருக்கும். "குழந்தைப் பராமரிப்பு நிலையங்களின் ஆரோக்கிய உணவு வழிகாட்டி" கையேட்டின் பிரதி எல்லா குழந்தைப் பராமரிப்பு நிலையங்களுக்கும் வழங்கப்படுகிறது. நன்கு திட்டமிடப்பட்ட சம நிலை ஊட்டச் சத்துணவுகள் பற்றிய சாதனங்கள் மற்றும் தகவல்களை அது எடுத்துரைக்கிறது. உங்கள் பிள்ளைக் சிறப்பு உணவுத் தேவைகள் இருக்குமானால், நிலைய மேற்பார்வையாளருடன் அவற்றைப் பற்றி விவாதியுங்கள்.

## ஊழியர்-ஆசிரியர் விவகாரங்கள்

**கே1. அமைச்சு நிர்ணயித்துள்ள ஆசிரியர்-பிள்ளைகள் விகிதாசாரம் எவ்வளவு?**

பிள்ளைகளின் வயது அடிப்படையிலான நிகழ்ச்சி நேரங்களுக்குரிய குறைந்தபட்ச ஆசிரியர்-பிள்ளைகள் விகிதம் வருமாறு:

| | |
|---|---|
| 18 மாதம் மற்றும் அதற்குக் குறைந்தவர்கள் | 1: 5 |
| 18 மாதத்திற்கு மேலிருந்து 30 மாதங்கள் | 1: 8 |
| 30 மாதத்திற்கு மேலிருந்து 3 ஆண்டுகள் | 1: 12 |
| 3 ஆண்டுக் மேலிருந்து 4 ஆண்டுகள் | 1: 15 |
| 4 ஆண்டுக் மேலிருந்து 7 ஆண்டுக்குள் | 1: 25 |

**கே2. என் பிள்ளையைப் பராமரிக்கும் ஆசிரியர், இளம் பிள்ளைகள் பராமரிப்புப் பயிற்சி பெற்றவரா என்பதை நான் அறிவது எப்படி?**

குழந்தைப் பராமரிப்பு நிலைய ஆசிரியர்கள் அனைவரும் குறைந்த பட்சம் பள்ளிக் கல்விக்கு முந்திய பாலர் போதனைக்குரிய பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். ஆசிரியர்களின் தொழில் பயிற்சித் தகுதியை நிலைய மேற்பார்வையாளரிடம் நீங்கள் கேட்டறியலாம். பாலர் போதனைக்குரிய பயிற்சிச் சான்றிதழ் பெறாத ஊழியர்கள் குழந்தைப் பராமரிப்பு உதவியாளர்கள் ஆவர். அவர்கள் ஆசிரியர்களின் நடவடிக்கைகள் மற்றும் பொது மேற்பார்வைப் பணிகளுக்கு உதவுவர்.

## பராமரிப்பு நிலையங்களிலுள்ள குழந்தைகளுக்கான கூடுதல் உதவித்தொகை

வேலைக்குச் செல்லும் பெற்றோர்களின் நலனுக்காக அடுத்த ஐந்தாண்டுகளில் கூடுதலான குழந்தை பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளவும், குழந்தைப் பராமரிப்பு நிலைய வசதிகளைப் பெறவும் விரும்பும் சிங்கப்பூரர்களுக்கு ஆதரவாக, அரசாங்கம், சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குழந்தைகளுக்கும் பிள்ளைகளுக்கும் தேவையான குழந்தைப் பராமரிப்பு உதவித் தொகைகளை பெற்றோருக்கு வழங்குகிறது.

17 ஆகஸ்டு 2008 முதல், குழந்தை பராமரிப்பு நிலையங்களிலுள்ள குழந்தைகளுக்கான உதவித் தொகை $150ல் இருந்து $300 ஆக உயர்த்தப்படும். இதனால் குழந்தைக்கு அதிகபட்சமாக ஒரு மாதத்திற்கு $600 கிடைக்கும். சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் இது பொருந்தும்.



**கே1. என் குழந்தையை/ பிள்ளையை நான் குழந்தை/ பிள்ளை பராமரிப்பு நிலையத்தில் சேர்த்தால் எத்தகைய அரசாங்க உதவித் தொகைகள் கிடைக்கும்?**

உரிமம்பெற்ற குழந்தைப் பராமரிப்பு நிலையங்களில் சேர்க்கப்பட்டுள்ள நிலையக் குழந்தைகள் மற்றும் பிள்ளைகளுக்குரிய பராமரிப்பு உதவித் தொகைகள் கிடைக்கும்.

உதவித் தொகைகள் பெற்றோர்கள் கட்டணத்தை செலுத்துவதற்குப் போதுமானதாக இருக்கும்.

• குழந்தை பராமரிப்பு உதவித் தொகை 2 முதல் 18 மாத சிங்கப்பூர் குடியுரிமையுள்ள குழந்தைகளுக்குக் கிடைக்கும்.
• பிள்ளைப் பராமரிப்பு உதவித் தொகை 18 மாதத்திற்கு

மேற்பட்ட 7 வயதுக்கு உட்பட்ட சிங்கப்பூர் குடியுரிமையுள்ள பிள்ளைகளுக்குக் கிடைக்கும்.

உதவித் தொகைகள் வேலைக்குச் செல்லும் மற்றும் வேலை பார்க்காத தாய்கள்/ ஒற்றைத் தந்தைகளுக்கு வழங்கப்படும். உதவித் தொகை விகிதங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள திட்ட முறை மற்றும் தாயார்/ ஒற்றைத் தந்தையின் வேலை நிலை அடிப்படையில் வழங்கப்படும். வேலைபார்க்கும் தாய் எனும் முறையில் தகுதி பெற அவர் மாதந்தோறும் குறைந்தபட்சம் 56 மணி நேரம் வேலைக்குச் செல்ல வேண்டும்.

கூடுதல் பராமரிப்புத் திட்டங்களின் தங்கள் பிள்ளைகளை பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களில் வைத்துள்ள தாயார்கள், பிள்ளைகள் நிலையங்களில் செலவிடும் மணிக் கணக்கில் சாதகமான விகிதத்தில் உதவித் தொகைகளைப் பெறுவார்கள்.

**A) குழந்தை பராமரிப்பு உதவித்தொகை**
**வேலை பார்க்கும் தாயார்கள்/ ஒற்றைத் தந்தையர்கள் அதிகபட்சமாக ஒரு குழந்தைக்கு மாதத்திற்கு $ 600 குழந்தைப் பராமரிப்பு உதவித் தொகையும், வேலைக்குச் செல்லாத தாயார்கள்/ ஒற்றைத் தந்தையர்கள் $ 150ம் பெறுவார்கள்.**

**தகுதி முறை**
a)குழந்தை பராமரிப்பு சேவைகள் வழங்கும் உரிமம் பெற்ற குழந்தை பராமரிப்பு நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட சிங்கப்பூர் குடியுரிமையுள்ள 2 முதல் 18 மாத வயதுடைய குழந்தை.



*அட்டவணை1: 2 முதல் 18 மாத சிங்கப்பூர் குழந்தைகளுக்கான குழந்தை பராமரிப்பு உதவித் தொகை*

| குழந்தை பராமரிப்புத் திட்டம் | குழந்தை பராமரிப்பு உதவித் தொகை (ஒரு மாதத்திற்கு) | |
|---|---|---|
| தினசரி பராமரிப்பு | வேலைக்குச் செல்லும்தாய் | வேலைக்குச் செல்லா தாய் |
| முழுநாள் பராமரிப்பு | $600 | $150 |
| அரைநாள் பராமரிப்பு | $300 | $150 |
| நீக்குப்போக்கான பராமரிப்பு | | |
| வாரத்திற்கு 12 மணி முதல் 24 மணி | $220 | $55 |
| வாரத்திற்கு 24 மணிக்கு மேல் 36 மணி | $330 | $110 |
| வாரத்திற்கு 36 மணிக்கு மேல் 48 மணி | $440 | $150 |
| வாரத்திற்கு 48 மணிக்கு மேல் | $600 | $150 |

B) குழந்தை பராமரிப்பு உதவித் தொகை
வேலை பார்க்கும் தாயார்கள்/ ஒற்றைத் தந்தையர்கள் அதிகபட்சமாக ஒரு குழந்தைக்கு மாதத்திற்கு $ 300 குழந்தைப் பராமரிப்பு உதவித் தொகையும், வேலைக்குச் செல்லாத தாயார்கள்/ ஒற்றைத் தந்தையர்கள் $150ம் பெறுவார்கள்.

தகுதி முறை
*உரிமம் பெற்ற குழந்தை பராமரிப்பு நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட சிங்கப்பூர் குடியுரிமையுள்ள 18 மாதத்திற்கு மேற்பட்ட 7 வயதுக்குக் குறைந்த குழந்தை.



*அட்டவணை 2 18 மாதத்திற்கு மேல் 7 வயதுக்குக் குறைந்த சிங்கப்பூர் குழந்தைகளுக்கான குழந்தை பராமரிப்பு உதவித் தொகை*

| குழந்தை பராமரிப்புத் திட்டம் | குழந்தை பராமரிப்பு உதவித் தொகை ( ஒரு மாதத்திற்கு) | |
|---|---|---|
| தினசரி பராமரிப்பு | வேலைக்குச் செல்லும்தாய் | வேலைக்குச் செல்லாதாய் |
| முழுநாள் பராமரிப்பு | $300 | $150 |
| அரை நாள் பராமரிப்பு | $150 | $150 |
| நீக்குப்போக்கான பராமரிப்பு | | |
| வாரத்திற்கு 12 மணி முதல் 24 மணி | $110 | $55 |
| வாரத்திற்கு 24 மணிக்கு மேல் 36 மணி | $165 | $110 |
| வாரத்திற்கு 36 மணிக்கு மேல் 48 மணி | $220 | $150 |
| வாரத்திற்கு 48 மணிக்கு மேல் | $300 | $150 |

**கே2. கைக்குழந்தை/பிள்ளை மானியத்திற்கு நான் எப்படி விண்ணப்பம் செய்வது?**

கைக்குழந்தை/பிள்ளை பராமரிப்புக்கான மானிய விண்ணப்பம் உங்கள் சார்பாக பிள்ளை பராமரிப்பு நிலையத்தால் செய்யப்படும். உங்களின் மானியத் தொகை கோரிக்கையை உறுதி செய்வதற்காகத் தயவு செய்து உங்களின் அடையாள அட்டை, உங்கள் பிள்ளையின் பிறந்த சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளை ஆதாரமாக உங்கள் பிள்ளையை பராமரிப்பு நிலையத்தில் சேர்க்கும்போது கொடுங்கள். உங்கள் முதலாளியின் பெயர், முகவரி, தொடர்பு எண், மாத சம்பளம் மற்றும் பிரதி மாதம் நீங்கள் வேலை செய்யும் மொத்த நேரம் போன்ற உங்களின் வேலை பற்றிய விவரங்களையும் நீங்கள் அறிவிக்க வேண்டும். உங்களின் மணவிலக்கு, வாழ்க்கைத்துணையை விட்டுப் பிரிந்திருத்தல் ஆகியவற்றுக்கான சம்பந்தப்பட் சட்ட ஆவணங்களையும் உங்கள் மணவிலக்கு மற்றும் பிள்ளைகள் உங்களுடன் இருத்தல் ஆகியவற்றுக்கான நீதிமன்ற ஆணையையும் நீங்கள் கொடுக்க வேண்டும்.



உங்களின் விண்ணப்பத்தை அமைச்சு அங்கீகரித்த மாதம் முதல் உங்களுக்கு மானியத் தொகை வழங்கப்படும். அங்கீகரிக்கப்பட்டதும், நிலையத்திடம் நீங்கள் பிள்ளைக்கான மானியத்தொகைபெறும் மாதக் கட்டணத்தை (அரசாங்கம் வழங்கும் மானியத் தொகை போக) செலுத்தவேண்டும்.

மானியம் கோரும் காரணத்திற்காக குறைந்தது ஆண்டுக்கு ஒருமுறையாவது உங்களின் வேலை செய்யும் நிலையை பிள்ளை பராமரிப்பு நிலையத்திடம் தெரிவிக்கவேண்டும்.

**கே3. எனது வேலை நிலையில் மற்றும் என் பிள்ளையின் குடியுரிமை நிலையில் மாற்றம் இருந்தால் நான் பிள்ளை பராமரிப்பு நிலையத்திடம் தெரிவிக்க வேண்டுமா?**

உங்களின் வேலை நிலையிலும் உங்கள் பிள்ளையின் குடியுரிமை நிலை குறித்தும் ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் பிள்ளை பராமரிப்பு நிலையத்துக்குத் தெரிவிப்பது உங்களின் பொறுப்பாகும். வேலை செய்யும் நிலைகுறித்து அறிவிப்பதோடு உங்கள் பிள்ளையின் குடியுரிமைத் தகுதி குறித்த சான்றிதழ் போன்ற ஆதார ஆவணங்களைக் குழந்தைப் பராமரிப்பு நிலையம் சரிபார்த்துக்கொள்ள நிலையத்திடம் தயவு செய்து கொடுங்கள். சுயமாக வேலை செய்யும் விண்ணப்பதாரிகளைப் பொறுத்தவரை, உங்களின் வேலை நிலை குறித்தும் பிரதி மாதத்திற்கான உங்களின் மொத்த வேலை நேரம் குறித்தும் சுட்டிக்காட்டும் சத்தியப் பிரமாணம் ஒன்றை நீங்கள் செய்து கொடுக்கவேண்டும்.

**கே4. பிள்ளை பராமரிப்பு நிலையம் ஒன்று பிள்ளை பராமரிப்புக் கட்டணம் மற்றும் மானியத் தொகை மீது எவ்வாறு ஜிஎஸ்டியைக் கணக்கிடுகிறது?**

ஜிஎஸ்டி பதிவுசெய்யப்பட்ட பிள்ளை பராமரிப்பு நிலையத்தைப் பொறுத்தவரை, மாதத்தின் முழு கட்டண மதிப்பின் மீது ஜிஎஸ்டி கணக்கிடப்பட்டு வசூலிக்கப்படும். பிள்ளை மானியத் தொகைக்கு முன்னர் பிள்ளை பராமரிப்புப் கட்டணம் $500 என்றும் மானியத் தொகை $150 என்றும் வைத்துக்கொள்வோம். பிள்ளை பராமரிப்பு நிலையம் $500 மீது ஜிஎஸ்டியை கணக்கிட்டு வசூலிக்கும். பெற்றறோர்கள் நிலையத்திற்கு மாதந்தோறும் கட்டணமாக $385-யைச் செலுத்தவேண்டும் ($500 + 7% ஜிஎஸ்டி  $150 பிள்ளை பராமரிப்பு மானியத் தொகை).



**கே5. என் பிள்ளையை பரிசோதனை முறையில் பிள்ளை பராமரிப்பு நிலையத்தில் சேர்த்தால் மானியத் தொகைக்கு நான் தகுதி பெறுவேனா?**

முழுநாள் மற்றும் அரைநாள் பராமரிப்புத் திட்டத்திற்காகக் குறைந்தது இரு வார சோதனைக் கால அவகாசத்தை பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள் வழங்க வேண்டும். குறைந்தது இரு வாரங்களுக்கு உங்கள் பிள்ளையை பிள்ளை பராமரிப்பு நிலையத்தில் சேர்த்தால் அக்காலத்திற்குரிய விகித அடிப்படையில் மானியத் தொகைக்கு நீங்கள் உரிமை பெற்றிருப்பதால் நீங்கள் குறைந்தது இரு வாரங்களுக்கான கட்டணத்தைச் செலுத்தினால் போதும்.

**கே6. நான் நீக்குப்போக்கான பராமரிப்பு மானியத்திற்குத் தகுதி பெறுவேனா?**

நீக்குப்போக்கான பராமரிப்பு மானியத்தைப் பெற நீங்கள் நீக்குப்போக்கான பராமரிப்புத் திட்டத்திற்கான முழுக் கட்டணத்தையும் செலுத்தவேண்டும்.

**கே7. என் பிள்ளைக்கு எப்போது பிள்ளை பராமரிப்பு மானியம் நிறுத்தப்படும்?**

பிள்ளை பராமரிப்பு நிலையத்திலிருந்து உங்கள் பிள்ளை விலகிக்கொண்டால் அல்லது உங்கள் பிள்ளை ஒரு மாதத்தில் குறைந்தது ஒரு நாளாவது நிலையத்திற்கு வராதிருந்தால் பிள்ளைக்கான பராமரிப்பு மானியத் தொகை நிறுத்தப்படும். உங்கள் பிள்ளையை நீண்ட விடுமுறையில் அழைத்துச் செல்ல விரும்பினால் பிள்ளை பராமரிப்புத் திட்டத்திலிருந்து உங்கள் பிள்ளையைத் தற்காலிகமாக நீங்கள் விலகிக்கொள்ளச் செய்யலாம். உங்கள் பிள்ளை நீண்டகால மருத்துவ அல்லது மருத்துவமனையில் தங்குவதற்கான விடுப்பில் இருந்தால், மானியத் தொகை உரிமைகோரலுக்கான சிறப்புப் பரிசீலனைக்காக ஆதார ஆவணங்களை நிலையத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்.

**கே8. பிள்ளை பராமரிப்பு நிலையத்திலிருந்து என் பிள்ளை விலகிக்கொள்ளும் அறிவிப்பை நான் முன்னரே கொடுத்து கடைசி மாதத்திற்கான முழுக் கட்டணத்தையும் செலுத்தியிருந்தால், நான் பிள்ளை பராமரிப்பு மானியத்திற்குத் தகுதி பெறுவேனா?**

கடைசி மாதத்தில் குறைந்தது ஒரு நாளாவது பிள்ளை பராமரிப்பு நிலையத்திற்கு உங்கள் பிள்ளை சென்றிருந்தால், நீங்கள் மானியத் தொகைக்குத் தகுதி பெற்றிருப்பீர்கள். பிள்ளையை நிலையத்திலிருந்து மீட்டுக்கொள்வது குறித்த நிலையத்தின் கொள்கையைப் பாருங்கள் அதோடு இந்த விஷயம் குறித்து நிலையத்தின் மேற்பார்வையாளருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

**கே9. என்னால் வேலை செய்ய இயலாவிட்டால், அல்லது சம்பளமில்லா விடுப்பில் இருந்தால் அல்லது படிப்பதற்கான விடுப்பில் இருந்தால் கைக்குழந்தை/பிள்ளை பராமரிப்பு மானியத்திற்கு நான் தொடர்ந்து தகுதி பெறுவேனா?**

சம்பளம் இல்லா விடுப்பு/படிப்பதற்கான விடுப்பு அல்லது நிரந்தர நோய் போன்ற சிறப்புச் சூழ்நிலைகள் காரணமாக உங்களால் வேலை செய்ய இயலவில்லை என்றால், பிள்ளை பராமரிப்பு மானியத்திற்காக அமைச்சிடம் நீங்கள் முறையீடு செய்யலாம். சம்பளமில்லா விடுப்புக்கான அங்கீகாரக் கடிதம், படிப்பிற்கான ஏற்புக் கடிதம், உங்கள் நோய் குறித்த மருத்துவச் சான்றிதழ் போன்ற ஆதார ஆவணங்களை நிலையத்திடம் நீங்கள் சமர்ப்பிக்கவேண்டும். உங்கள் சார்பாக சிறப்பு பரிசீலனை செய்யுமாறு நிலையம் விண்ணப்பித்துக்கொள்ளும். எல்லா மேல் முறையீடுகளும் ஒவ்வொரு விண்ணப்பத்தின் தகுதி அடிப்படையில் பரிசீலிக்கப்படுவதுடன் உங்களின் மேல்முறையீட்டின் முடிவும் நிலையம் வழியாகத் தெரிவிக்கப்படும்.

**கே10. பிள்ளை பராமரிப்பு மானியத் தொகை கோரிக்கைகளுக்காகத் தவறான / பொய்யான தகவலை வழங்கியதற்காக நான் தண்டிக்கப்படுவேனா?**

பிள்ளை பராமரிப்பு மானியக் கோரிக்கைக்காக எங்களுக்கு பொய்யான/தவறான தகவலை நீங்கள் கொடுத்துள்ளீர்கள் என்று அமைச்சு கண்டுபிடித்தால், உங்களுக்குக் கொடுக்கப்பட்ட எல்லா மானியத் தொகையையும் அமைச்சிடம் நீங்கள் திருப்பிக்கொடுக்கவேண்டும். உங்களுக்குக் கொடுக்கப்பட்ட மானியத் தொகையை நீங்கள் முழுதாகத் திருப்பிக்கொடுத்தாலும், அமைச்சுக்குப் பொய்யான தகவல் கொடுத்ததற்காக உங்கள் மீது சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படலாம்.



குழந்தைப் பராமரிப்பு நிலையங்களே பெற்றோர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முதல் மையங்கள். உங்கள் பிள்ளைகளுக்கான நிலையத்தின் கல்வி நிகழ்ச்சி, நிர்வாகம் அல்லது மற்ற அம்சங்களில் சந்தேகங்கள் அல்லது கேள்விகளுக்கு இடமிருந்தால் முதலில் நீங்கள் குழந்தைப் பராமரிப்பு நிலையத்துடன் ஆலோசனை நடத்த வேண்டும். மேல் விவரம் பெற எங்களின் http://www.childcarelink.gov.sg இணையத் தளத்திற்கு நீங்கள் செல்லலாம்.

அதற்கு மாறாக, பட்டியலிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிறுவனங்கள் / நிர்வாகங்களை நீங்கள் அணுகி தேவைப்படும் மேல் விவரமும் ஆலோசனையும் பெறலாம்.

## குழந்தை போனஸ் / சிறுவர் மேம்பாட்டுக்கணக்கு (CDA)

| | |
|---|---|
| ***நிறுவனம் / நிர்வாகம்:*** | MCYS அமைச்சு |
| ***தொலைபேசி:*** | 1800-253 7707 |
| ***மின் அஞ்சல்:*** | mcys_babybonus@mcys.gov.sg |







## குழந்தை துஷ்பிரயோகம்

*நிறுவனம் / நிர்வாகம்:* MCYS அமைச்சு
*தொலைபேசி:* 1800-258 6378
*இணையத் தளம்:* http://app.mcys.gov.sg/web/faml_nurture_childprotect.asp

## குழந்தைப் பராமரிப்பு உதவித் தொகை

*நிறுவனம் / நிர்வாகம்:* MCYS அமைச்சு
*தொலைபேசி:* 1800-258 5812
*மின் அஞ்சல்:* mcys_childcarelink@mcys.gov.sg

## குழந்தைப் பராமரிப்பு உரிம விவகாரங்கள்

*நிறுவனம் / நிர்வாகம்:* MCYS அமைச்சு
*தொலைபேசி:* 1800-258 5812
*மின் அஞ்சல்:* mcys_childcarelink@mcys.gov.sg





## சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகளுக்

| | |
|---|---|
| *நிறுவனம் / நிர்வாகம்:* | MCYS அமைச்சு |
| *இணையத் தளம்:* | http://app.mcys.gov.sg/web/indv_abtdisable.asp |

| | |
|---|---|
| *நிறுவனம் / நிர்வாகம்:* | Disability Information and Referral Centre |
| *தொலைபேசி:* | 1800-347-2222 |
| *இணையத் தளம்:* | http://www.disability.org.sg |

## பிள்ளைகளின் பாதுகாவல்

| | |
|---|---|
| *நிறுவனம் / நிர்வாகம்:* | குடும்ப நீதிமன்றம் |
| *இணையத் தளம்:* | http://www.familycourtofsingapore.gov.sg/index.htm |

## குடும்ப சேவைத் தகவல் ஏடு

| | |
|---|---|
| *நிறுவனம் / நிர்வாகம்:* | MCYS அமைச்சு |
| *இணையத் தளம்:* | http://app.mcys.gov.sg/web/serv_dss_disabilitymain.asp?Services_Id=2 |

## குழந்தைப் பராமரிப்பு நிலைய ஊழியர்களின் வேலை விவகாரங்கள்

*நிறுவனம் / நிர்வாகம்:* மனிதவள அமைச்சு (MOM)
*தொலைபேசி:* 6438 5122
*இணையத் தளம்:* http://www.mom.gov.sg/

## குடும்பக் கல்வி

*நிறுவனம் / நிர்வாகம்:* MCYS
*இணையத் தளம்:* www.family.gov.sg/parenting

## தொற்று நோய்கள்

*நிறுவனம் / நிர்வாகம்:* சுகாதார அமைச்சு (MOH)
*தொலைபேசி:* 6325 9220
*இணையத் தளம்:* http://www.moh.gov.sg/mohcorp/publications.aspx?id=2962





## பிள்ளைகளுக்கான ஊட்டச் சத்து

| | |
|---|---|
| *நிறுவனம் / நிர்வாகம்:* | சுகாதார மேம்பாட்டு வாரியம் (HPB) |
| *தொலைபேசி:* | 6435 3817 |
| *இணையத் தளம்:* | http://www.hpb.gov.sg/hpb/default.asp?pg_id=2469 |

## இரைச்சல்-சத்த அளவு

| | |
|---|---|
| *நிறுவனம் / நிர்வாகம்:* | நகர சீரமைப்பு வாரியம் (URA) தனியார் வளாகங்களிலுள்ள குழந்தைப் பராமரிப்பு நிலையங்களுக்கு |
| *தொலைபேசி:* | 6223 4811 |
| *இணையத் தளம்:* | http://www.ura.gov.sg |

## பிள்ளைகளின் வாகனப் போக்குவரவு / போக்குவரவு பிரச்கினைகள்

| | |
|---|---|
| *நிறுவனம்/ நிர்வாகம்:* | நிலப் போக்குவரவு வாரியம் (LTA) |
| *தொலைபேசி:* | 1800-225 5582 |
| *இணையத் தளம்:* | http://www.lta.gov.sg/home/index_home_contact.htm |

## சுற்றுப்புறம் எ.கா. கொசுக்கள்

| | |
|---|---|
| *நிறுவனம் / நிர்வாகம்:* | தேகிய சுற்றுப்புற நிறுவனம் (NEA) தனியார் வளாகங்களிலுள்ள குழந்தைப் பராமரிப்பு நிலையங்களுக்கு |
| *தொலைபேகி:* | 1800-225 5632 |
| *இணையத் தளம்:* | http://www.nea.gov.sg |

நகர மன்றங்கள், வீடமைப்பு வளர்ச்சிக் கழக வளாகங்களிலுள்ள குழந்தைப்பாரமரிப்பு நிலையங்களுக்கு

- **அல்ஜுனிட் நகர மன்றம்**

| | |
|---|---|
| *தொலைபேகி:* | 6744 1033 |
| *இணையத் தளம்:* | http://www.aljunied-tc.org.sg |

- **அங் மோ கியோ நகர மன்றம்**

| | |
|---|---|
| *தொலைபேகி:* | 6453 0511 |
| *இணையத் தளம்:* | http://www.amktc.org.sg |





## சுற்றுப்புறம் எ.கா. கொசுக்கள்

- பீஷான்-தோபாயோ நகர மன்றம்

*தொலைபேசி:* 6259 6700
*இணையத் தளம்:* http://www.btptc.org.sg

- ஈஸ்ட் கோஸ்ட் நகர மன்றம்

*தொலைபேசி:* 6444 9549
*இணையத் தளம்:* http://www.ectc.org.sg

- ஹாலந்து-புக்கிட் பாஞ்சாங் நகர மன்றம்

*தொலைபேசி:* 6766 9100
*இணையத் தளம்:* http://www.hbptc.org.sg

- ஹொங் கா நகர மன்றம்

*தொலைபேசி:* 6764 3295
*இணையத் தளம்:* http://www.hktc.org.sg

## சுற்றுப்புறம் எ.கா. கொசுக்கள்

- ஹவ்காங் நகர மன்றம்

*தொலைபேசி:* 6286 3533
*இணையத் தளம்:* http://www.hougang.org.sg

- ஜாலான் புசார் நகர மன்றம்

*தொலைபேசி:* 6298 9222
*இணையத் தளம்:* http://www.jbtc.org.sg

- ஜுரோங் நகர மன்றம்

*தொலைபேசி:* 6561 2222
*இணையத் தளம்:* http://www.jrtc.org.sg

- மரீன் பரேட் நகர மன்றம்

*தொலைபேசி:* 6241 6044
*இணையத் தளம்:* http://www.mptc.org.sg





## சுற்றுப்புறம் எ.கா. கொசுக்கள்

- பாசிர் ரிஸ்-பொங்கோல் நகர மன்றம்

*தொலைபேசி:* 6585 4938
*இணையத் தளம்:* http://www.prpg-tc.org.sg

- பொத்தோங் பாசிர் நகர மன்றம்

*தொலைபேசி:* 6284 5000
*இணையத் தளம்:* http://www.potongpasirtc.org

- செம்பவாங் நகர மன்றம்

*தொலைபேசி:* 6368 3100
*இணையத் தளம்:* http://www.sembawangtc.org.sg

- டெம்பனிஸ் நகர மன்றம்

*தொலைபேசி:* 6781 2222
*இணையத் தளம்:* http://www.ttc.org.sg

## சுற்றுப்புறம் எ.கா. கொசுக்கள்

- **தஞ்சோங் பகார் நகர மன்றம்**

*தொலைபேசி:* 6272 6415
*இணையத் தளம்:* http://www.tptc.org.sg

- **வெஸ்ட் கோஸ்ட் - ஆயர் ராஜா நகர மன்றம்**

*தொலைபேசி:* 1800- 776 0271
*இணையத் தளம்:* http://www.wcartc.org.sg







இந்த வழிகாட்டிக் கையேடு சமூக வளர்ச்சி, இளையர், விளையாட்டுத் துறை அமைச்சின் குடும்பப் பராமரிப்புப் பிரிவின் துணை இயக்குநர் Mrs Ismail Ellias தலைமையில், அதன் அதிகாரிகள் அடங்கிய திட்டக் குழுவினால் உருவாக்கப்பட்டது.

**திட்டக் குழுவின் உறுப்பினர்கள்:**

Mrs Lim Seok Cheng
உதவி இயக்குநர்
குழந்தைப் பராமரிப்புப் பிரிவு

Ms Adeline Tay
மூத்த குடும்பச் சேவைகள் அதிகாரி

Mrs Irene Yoong
மூத்த குடும்பச் சேவைகள் அதிகாரி

Ms Julita Mohd Hussen
மூத்த குடும்பச் சேவைகள் அதிகாரி

Ms Koh Or Gek
குடும்பச் சேவைகள் அதிகாரி

Ms Sophia Ong
குடும்பச் சேவைகள் அதிகாரி

Ms Yeo Sui Chen
குடும்பச் சேவைகள் அதிகாரி

இந்தப் பதிப்புப் பணிக்கு உதவிய  பெற்றோர்கள், பிள்ளைகள், மேற்பார்வையாளர்கள் மற்றும் கீழ்க் கண்ட நிறுவனங்கள் / நிலையங்களின் உரிமதாரர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்:

Amazing Star Montessori House
Aspiration Child Care Centre
Bright Kids School House Pte Ltd
Cherie Hearts Child Development Pte Ltd
DayStar Child Development Centre
Eager Beaver Schoolhouse
Eileen's Child Care Centre Pte Ltd
Happy Town Child Care Centre
Iyad Perdaus Child Development Centre
Kinderland Educare Services Pte Ltd
Learning Vision @Work (Temasek Polytechnic)
Little Footprints School House Pte Ltd
Merilyn Child Care Centre
Mini World Child Care & Development Centre Pte Ltd
New Life Child Care
NTUC Childcare Co-operative Ltd
PAP Community Foundation
PCF Sparkletots Queenstown Child Care Centre
Rejoice Child Development Centre
Small World Educare Centre
Smiling Kids Pte Ltd
SunnyTots Schoolhouse
The Moral Child Care Centre
The Sunbird Child Development Centre Pte Ltd

குறிப்புகள்

# பெற்றுக்கொண்டதற்கு ஒப்புதலளித்தல்

______________________________, எனும் நான்
(அடையாள அட்டையில் உள்ளதுபோல பெற்றோரின்/பாதுகாவலரின் பெயர்)

______________ (பிறப்புச் சான்றிதழ் எண்: ______________)
(பிறப்புச் சான்றிதழில் உள்ளதுபோல பிள்ளையின் பெயர்)

என்பவரின் பெற்றோர்/பாதுகாவலர் ஆவேன். சமூக வளர்ச்சி, இளையர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின், " பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களில் பிள்ளைகளை வைத்திருக்கும் பெற்றோர்களுக்கான கையேடு, திருத்தப்பட்ட பதிப்பு ஜனவரி 2008"-ஐ ______________ பெற்றுக்கொண்டேன்.
(நிலையத்தின் பெயர்)

______________ ______________
பெற்றோரின்/பாதுகாவலரின் கையொப்பம் தேதி